சர்வதேச அரங்க நிறுவனம் (ITI)
நிகழ்த்துக்கலைகளுக்கான உலகளாவிய அமைப்பு

# உலக நாடக தினம்

மார்ச்சு 27, 2025

உலக நாடக தின செய்தியை வழங்குபவர் : **தியொடோரஸ் தெர்சோபுலோஸ்**
நாடக இயக்குநர், கல்வியாளர், எழுத்தாளர், அட்டிஸ் தியேட்டர் குழுவின் நிறுவனர் மற்றும் கலை இயக்குநர், தியேட்டர் ஒலிம்பிக்ஸ் நிகழ்ச்சியின் வழிகாட்டி மற்றும் சர்வதேச தியேட்டர் ஒலிம்பிக்ஸ் குழுவின் தலைவர் - கிரீஸ்

ஆங்கில மொழி பெயர்ப்பு : **Yiola Klitou, Cyprus Centre of I.T.I.**

தமிழ் மொழி பெயர்ப்பு : **முனைவர் மு.சுப்பையா**
உதவிப்பேராசிரியர், நிகழ்கலைத்துறை, புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.

மெய்நிகர் உலகின் சிறைகளில் முடக்கப்பட்ட, தனிப்பட்ட வாழ்வின் மூச்சு முட்டும் தனிமையில் மூழ்கிய, நெருக்கடியான தனியுரிமையில் சிறுபடுத்தப்பட்ட குடிமக்களின் உலகத்தில்! முழுக்க முழுக்க கண்காணிப்பு மற்றும் அடக்குமுறையின் கீழ் இயங்கும் முடிவில்லா தனியாட்சி அமைப்பில் இயந்திரமயமான மனிதர்களின் உலகத்தில்! வறுமையும் பட்டினியும் காரணமாக மக்கள் அவதிப்படும் உலகத்தில்! நாடகம், நம் காலம் வெளிப்படுத்தும் தீவிர அபாய நிலையின் கூக்குரலை கேட்கும் நிலையில இருக்கிறதா?

நாடகம், சுற்றுச்சூழல் அழிவைப் பற்றி கவலைப்படுகிறதா? உலக வெப்பமயமாதல், உயிரின விரிவியல் அழிவு, கடல் மாசுபாடு, பனிக்கட்டிகள் உருகுதல், அதிகரித்து வரும் காட்டுத்தீ மற்றும் கடுமையான வானிலை மாற்றங்கள்-இவற்றை எதிர்கொள்ள நாடகம் எந்த வகையில் செயல்படுகிறது? இவற்றைப் பற்றிக் கவலை கொள்கிறதா? நாடகம், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் செயலில் ஈடுபடும் அங்கமாக மாற முடியுமா?

மனிதனின் பூமிக்கான தாக்கத்தை நாடகம் நீண்ட காலமாக கவனித்து வருகின்றது. ஆனால் இந்த பிரச்சினையை எதிர்கொள்ளும் வழிகளை கண்டுபிடிக்க முடியாமல் நாடகம், இன்னமும் போராடிக் கொண்டிருக்கிறது.

இன்றைய 21-ஆம் நூற்றாண்டில் மனித நிலைமை எவ்வாறு உருவாகிக்கொண்டு வருகிறது என்பதில் நாடகம் கவலை கொண்டிருக்கிறதா? ஒவ்வொரு தேசத்தின் குடிமகனும் அரசியல் மற்றும் பொருளாதார பலம் கொண்டவர்களாலும், ஊடகக் கட்டமைப்புகளாலும், கருத்து உருவாக்கும் நிறுவனங்களாலும் கட்டுப்படுத்தப் படுகிறான். சமூக ஊடகங்கள் தகவல் பரிமாற்றத்தை எளிதாக்கினாலும், அவை ஒருவகையில் தொடர்பு கொள்ளவேண்டிய "மற்றவனை" தவிர்க்க தேவையான பாதுகாப்பான தூரத்தை உருவாக்கும் ஓர் ஆதிக்கக் காரணியாக மாறிவிட்டது.

நாடகம் இந்த தீவிரமான வரலாற்றுக் காயங்களை கணக்கில் கொள்ளாமல், வேற்றுமைகளை இணைக்கும் பணிக்கூடமாக செயல்பட முடியுமா? இந்த தீவிரமான ரத்தம் சொட்டும் வரலாற்றுக் காயங்கள், நம்மை மீண்டும் ஒரு புதிய புராணத்தை உருவாக்க அழைக்கிறது.

**ஹைனர் முல்லர் (Heiner Muller)** கூறியது போல்:
"புராணம் என்பது ஒரு தொகுப்பு, அது ஒரு இயந்திரம். அதனுடன் எப்போதும் புதியதும் மாறுபட்டதுமான இயந்திரங்களை இணைக்கலாம். அது தனது ஆற்றலை எடுத்துச் செல்லும். அந்த ஆற்றலின் வேகம் அதிகரிக்கும்போது அது கலாச்சாரத்தின் பரப்பை வெடிக்கச் செய்யும்".

நான் இதைச் சொல்கிறேன் -"அது கொடுஞ்செயலுக்கு நம்மை அழைத்துச் செல்லும். அது வெறித்தனத்தின் பரப்பையும் தாக்கும்".

நாடக ஒளி விளக்குகள், சமூகவலிகளை வெளிச்சமிட்டு காட்ட முடியுமா? அல்லது, தன்னைத்தானே வெளிச்சமிட்டுக் காட்டுவதிலேயே முடங்கிவிடுமா? இவை தீர்வு இல்லாத கேள்விகள்-ஏனெனில் நாடகம், பதிலளிக்க முடியாத கேள்விகளால் தான் வாழ்கிறது.

தியோனிசியசால் எழுப்பப்பட்ட இந்த கேள்விகள், அவரது பிறப்பிடத்தையும், பழமையான நாடக அரங்கத்தின் ஆர்ச்சஸ்ட்ராவையும் கடந்து, போர்களின் நிலப்பரப்புகள் வழியாக அவரது அமைதியான அகதிப் பயணத்தை இன்று உலக நாடக தினத்திலும் தொடர்கிறது.

உலக நாடகக் கலையின் தெய்வமான தியோனிசியசின் கண்களை நாம் நோக்குவோம். அவர் நாடகத்திற்கும் புராணத்திற்கும் உரிய தெய்வம். கடந்த காலத்தையும், நிகழ் காலத்தையும், எதிர் காலத்தையும் இணைக்கும் அவர் இரண்டு பிறவிகளை பெற்றவர்-சூசன் மற்றும் செமலே ஆகியோரின் மகன். உருமாறும் அடையாளங்களை வெளிப்படுத்துபவர். பாலின அடையாளங்களை மீறுபவர்-பெண்ணும் ஆணும், கோபமுமாகவும் கருணையுமாகவும், தெய்வீகமும் விலங்குமாகவும் இருப்பவர். பைத்தியத்துக்கும் பகுத்தறிவுக்கும், ஒழுங்குக்கும் குழப்பத்துக்கும் இடையில் உயிர்ப்பும் இறப்பும் சந்திக்கும் விளிம்பில் நுட்பமாக நிலைநிற்கும் உணர்வு கொண்ட கலைஞன்.

தியோனிசஸ் இருத்தலியல் சார்ந்த தத்துவ விசாரணை சார்ந்த ஒரு அடிப்படை கேள்வியை எழுப்புகிறார், "இது எல்லாம் ஏன்?" இந்தக் கேள்வியே படைப்பாளியை புராணத்தின் வேருக்குள் சென்று அதன் ஆதாரத்தையும் மனிதன் என்பதன் மர்மத்தின் பன்முக பரிமாணங்களை ஆழமாக ஆராயும் பயணத்திற்கு இட்டுச் செல்கிறது.

நாம் புதிய கதையாடல் முறைகளை உருவாக்க வேண்டும், அவை நினைவுகளைப் பேணுவதற்கும், புதிய நெறிப்பண்பும் அரசியல் பொறுப்பும் உருவாக வழிவகுப்பதற்கும் பயன்பட வேண்டும். நம்மை இன்றைய மத்திய யுகத்தின் பல்வேறு அடக்கு முறைகளில் இருந்து நம்மை மீட்டெடுக்க வேண்டும்.

